**செய்தி வெளியீடு எண்:121** **நாள்:14.02.2021**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 13.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நங்கவள்ளி ஒன்றியம், பாப்பாத்திக்காடு கிராமத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியையும், மூலக்காடு கிராமத்தில் தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளியையும் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13.3.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் “வரும் கல்வி ஆண்டில், 5 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் 25 புதிய அரசு தொடக்கப் பள்ளிகள் துவங்கப்படும். மேலும், 10 அரசு தொடக்கப் பள்ளிகள் 3 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும். இப்பள்ளிகளுக்கு தேவைப்படும் 3 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும். மேலும், தேவைப்படும் ஆசிரியர் பணியிடங்கள் பணிநிரவல் மூலம் நிரப்பப்படும்” என்றும், ‘‘வரும் கல்வியாண்டில் 15 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும். இப்பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் 26 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் செய்து கொடுப்பதுடன், தேவையான கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் 9 கோடியே 87 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்’’ என்றும் அறிவித்தார்கள்.

மேலும், 20.3.2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘பல்வேறு தரப்பினரிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், ஏற்கனவே அறிவித்த 15 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கு பதிலாக, 50 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், மேலும் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு பதிலாக 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், வரும் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

மேற்கண்ட அறிவிப்புகளுக்கு இணங்க மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திட வேண்டும் என்ற உயரிய நோக்கில், 25 புதிய தொடக்கப்பள்ளிகள் துவங்கிடவும், 10 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், முதற்கட்டமாக

35 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை, அரசு உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், 40 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை, அரசு மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும் அரசாணைகள் வெளியிடப்பட்டன.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நங்கவள்ளி ஒன்றியம், பாப்பாத்திக்காடு கிராமத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியையும், மூலக்காடு கிராமத்தில் தரம் உயர்த்தப்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளியையும் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி. பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி ஆணையர் திரு.என்.வெங்கடேஷ், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**